**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**G.O.P.No.53/2022**

12.09.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

I.A.No.7/2025 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மனுதாரர் சாட்சி 1 ராணி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

என் வயது 65. என் வயதை நிரூபிக்க நான் ஆதார் அட்டை அல்லது வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல்செய்துள்ளேன். எனக்கு கண்பார்வை நன்றாக உள்ளதா என்றால் நன்றாக உள்ளது. நான் கண்பார்வைக்கு அறுவைசிகிச்சை செய்துகொண்டுள்ளேன் என்றால் 5 அல்லது 6 வருடங்கள் முன்பு அறுவைசிகிச்சை செய்துகொண்டுள்ளேன். நான் நல்ல உடல் நலத்துடன் உள்ளேன் என்று நிரூபிக்க மருத்துவ ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எதிர்மனுதாரர் பத்மபிரியாவிற்கு தற்போது எத்தனை வயது என்றால் 36 வயது. மைனர் ராம்நாராயணனின் தாயார் தான் எதிர்மனுதாரர் என்றால் ஆமாம். இந்த மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பேரன் ராம்நாராயணன் என்னுடன் இருக்கவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். என் பேரனுக்கு தற்போது எத்தனை வயது என்றால் சுமார் 15 வயது, 10ம் வகுப்பு படிக்கிறார். என் பேரன் பிறந்த தேதி தெரியுமா என்றால் 29.10.2010. என் பேரன் எந்த மருத்துவமனையில் பிறந்தார் என்றால் கோரிமேடு மருத்துவமனையில் பிறந்தார். பிறந்தது முதல் பேரன் என்னுடன் தான் இருந்துவருகிறார் என்று நான் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என் மகன் சௌரிராஜன். என் மகன் சௌரிராஜன், அவர் மனைவி பத்மபிரியா, என் பேரன் மற்றும் நான் ஆகியோர் என் பேரன் பிறந்தபோது ஒன்றாக குடியிருந்தோம் என்றால் ஆமாம். நாங்கள் அனைவரும் ஒன்றாக குடியிருந்ததால் என் பேரன் என்னுடன் குடியிருந்ததாக தவறாக சொல்கிறேன் என்றும் என் பேரன்

எதிர்மனுதாரருடன் தான் குடியிருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் முழுபெயர் என்ன என்றால் லெனின் சௌரிராஜன். என் மகன் மோட்டார் வாகன விபத்தில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். எப்போது இறந்தார் என்றால் 28.05.2012ல் இறந்தார். என் மகன் இறந்தபிறகு நான் எதிர்மனுதாரரை அவருடைய பெற்றோர் வீட்டிற்கே சென்றுவிடும்படி கூறி வீட்டைவிட்டு வெளிறே விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. என் மகன் விபத்தில் இறந்த சமயத்தில் என் பேரனுக்கு 2 வயது என்றால் ஆமாம். என் மருமகளை வீட்டை விட்டு விரட்டிய சமயத்தில் குழந்தையை கொடுக்காமல் என்னுடன் வைத்துக்கொண்டேன் என்றால் நான் குழந்தையை கொடுக்கவில்லை. வளவனூர் காவல் நிலையத்தில் என் மருமகள் நகையையும் குழந்தையையும் கேட்டு என் மீது 14.09.2012 தேதியில் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். எங்களை காவல் நிலையம் வரவழைத்து ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் ஆமாம். அந்த பஞ்சாயத்தில் வாரத்தில் 5 நாட்கள் குழந்தை எதிர்மனுதாரரிடம் இருக்கவேண்டும் என்றும் சனி, ஞாயிறு நாட்களில் என்னிடம் இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்தார்கள் என்றும் அதை ஒப்புக்கொண்டு குழந்தையை நான் எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன் என்றும் சொன்னால் ஆமாம். இந்த ஏற்பாட்டின் படி தான் என் பேரன் வாரத்தில் 5 நாட்கள் எதிர்மனுதாரரிடமும் 2 நாட்கள் என்னிடமும் இருந்து வருகிறார் என்றும் என் பேரன் என்னிடம் மட்டும் இருந்துவருவதாக நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவர் பெற்றோர் வீட்டிற்கு செல்லும்போது குழந்தையை என்னிடம் விட்டுவிட்டு சென்றதாகவும் நான் மட்டுமே குழந்தையை கவனித்து பராமரித்து வருவதாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை வீட்டைவிட்டு அனுப்பும் போது என் கணவர் தேவநாதன் எதிர்மனுதாரரிடம் சில வெற்றுப்பத்திரங்களில் கையொப்பம் வாங்கிகொண்டு அனுப்பினார் என்றால் அது பொய். அவ்வாறு வெற்றுப்பத்திரங்களில் கையொப்பம் வாங்கியதை வைத்து என் கணவருக்கு எதிரி மனுதாரர் பொது அதிகாரம் வழங்கியதாக ஒரு பத்திரம் 10.09.2012ல்

எழுதி பதிவு செய்துள்ளோம் என்றால் வெற்றுப்பத்திரத்தில் கையொப்பம் வாங்கவில்லை, எதிர்மனுதாரர் பதிவு அலுவலகம் வந்து பத்திரம் எழுதி கொடுத்த அது பதிவு செய்யப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.